

தலைமைச் செயலகத்தில் நேற்று (14.08.2024) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் முன்னிலையில் தமிழ்நாடு அரசின், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் கைத்தறி, கைத்திறன் துணிநூல் (ம) கதர் துறை ஆகிய துறைகள், ஐக்கிய நாடுகளின் பாலின சமத்துவத்திற்கான அமைப்புடன் (United Nations Women) இணைந்து தமிழ்நாடு அரசு துணிநூல் மற்றும் ஆடை நிறுவனங்களில் பெண்களுக்குப் பாதுகாப்பான பணியிடங்களை ஊக்குவித்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அரசுச் செயலர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர் திருமதி வே. அமுதவல்லி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு இணைச் செயலாளர் திருமதி ச. வளர்மதி, மற்றும் ஐக்கிய நாடுகளின் பாலின சமத்துவ அமைப்பின் (United Nations Women) இந்திய நாட்டின் பிரதிநிதி சூசன் பெர்கசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நெடுஞ்சாலைத்துறை சார்பில்

# 180 பேருக்கு உதவியாளர் பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக. 15-

நெடுஞ்சாலைத் துறை சார்பில் 180 நபர்களுக்கு உதவியாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.08.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தொகுதி IIA பணிக்கான நெடுஞ்சாலைத் துறையின் உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 180 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கிடும் வகையில், நெடுஞ்சாலை துறை வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், மேம்பாடு செய்தல், புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நெடுஞ்சாலைத் துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை நெடுஞ்சாலைத்துறை சார்பில் 414 இளநிலை வரைதொழில் அலுவலர்கள், 33 உதவிப் பொறியாளர்கள், 66 இளநிலை உதவியாளர்கள், 48 தட்டச்சர்கள், 6 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலைIII, 4 தணிக்கை உதவியாளர்கள் ஆகியோர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நேரடி நியமனத்திலும், 45 இளநிலை உதவியாளர்கள், 3 உதவி வரைவாளர்கள், 9 தட்டச்சர்கள், 27 பதிவுரு எழுத்தர்கள் மற்றும் 24 அலுவலக உதவியாளர்கள் ஆகியோர் கருணை அடிப்படையிலும் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நெடுஞ்சாலைத் துறையின் உதவியாளர் பணியிடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 180 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் நேற்று 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு. ஆர். செல்வராஜ், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) ஆர். சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை மருத்துவக் கல்லூரிக்கு

# தேசிய தர வரிசைப் பட்டியலில் 10-ஆம் இடம்!

## சான்றிதழை - அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் காண்பித்து வாழ்த்து!

சென்னை, ஆக.15 -

சென்னை மருத்துவக் கல்லூரி 2024 ஆம் ஆண்டு, *National Institutional Ranking Framework (NIRF)* தரவரிசை பட்டியலில் 10-ஆம் இடமும், மாநில அரசுகள் நடத்தும் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்லூரிகளின் வரிசையில் இந்திய அளவில் முதல் இடமும் பிடித்துள்ளது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களிடம் சான்றிதழ் காண்பித்து வாழ்த்து பெறப்பட்டது.

இந்தியாவில் உள்ள மொத்த அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் எண்ணிக்கை 706, அதில் *National Institutional Ranking Framework* (NIRF) இல் கலந்து கொண்ட அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 182 ஆகும்.

இந்தியா முழுவதும் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு அதாவது, தெற்கு பகுதியில் 76 மருத்துவக் கல்லூரிகள், வடக்கு பகுதியில் 43 மருத்துவக் கல்லூரிகள், கிழக்கு பகுதியில் 14 மருத்துவக் கல்லூரிகள், மேற்கு பகுதியில் 49 மருத்துவக் கல்லூரிகள் என்று மொத்தம் 182 அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் விண்ணப்பித்திருந்தது.

இதில் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்லூரிகளின் வரிசையில் 2024-ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரி 10-ம் இடமும், மாநில அரசுகள் நடத்தும் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்லூரிகளின் வரிசையில் இந்திய அளவில் முதல் இடமும் பிடித்திருப்பது சிறப்பிற்குரியது.

கடந்த காலங்களில் 2019-ஆம் ஆண்டு 16-ஆம் இடமும், 2021-ஆம் ஆண்டு 14-ஆம் இடமும், 2022-ஆம் ஆண்டு 12-ஆம் இடமும், 2023-ஆம் ஆண்டு 11-ஆம் இடமும் பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு (2024) *National Institutional Ranking Framework* (NIRF) இல் சென்னை மருத்துவக் கல்லூரி 10-வது இடம் பிடித்துள்ளது சிறப்பிற்குரியது.

இந்த சான்றிதழ் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களிடம் சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன் காண்பித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில் சென்னை மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் மரு. கவிதா, நோடல் அலுவலர் மரு.அன்புச்செல்வி ஆகியோர் உடனிருந்தனர்.


### வேலூர் நாடாளுமன்றத் தொகுதி

# கதிர்ஆனந்த் எம்.பி. இன்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் 1508 2024 மாலை கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**குடியாத்தம் சட்டமன்ற தொகுதி - பேர்ணாம்பட்டு நகரம்**

| வ.எ | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | மாலை 6.00 | பாரத் ஸ்டேட்வங்கி அருகில் |
| 2. | மாலை 6.30 | நாலுகம்பம் (ஆசாத் சௌக்) |
| 3. | மாலை 7.00 | பேர்ணாம்பட் பேருந்து நிலையம் |




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேலூர் மாவட்டம் தொரப்பாடியில் ஆதிதிராவிடர் வீட்டுவசதி கழகத்தின் சார்பில் ரூ.1.50கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு இளங்கலை கல்லூரி மாணவியர் விடுதியை திறந்து வைத்ததை தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி ஆகியோர் திறந்து வைத்தனர். அருகில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா, மண்டல குழு தலைவர் வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகக் கூட்டரங்கில் நேற்று (14.08.2024) வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் 2024ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், வணிகவரித் துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன் மற்றும் இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி துர்காமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் மாயத்தேவன்பட்டி கிராமத்திலுள்ள

# பட்டாசு ஆலை வெடிவிபத்து - உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

விருதுநகர், ஆக. 15-

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் மாயத்தேவன்பட்டி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார். அதன் விவரம் வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், மல்லி உட்கடை மாயத்தேவன்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் இன்று (1408 2024) காலை சுமார் 09.20 மணியளவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர், மல்லி உட்கடை நாகபாளையத்தைச் சேர்ந்த திரு. புள்ளகுட்டி (வயது 65) த/பெ.கோபால்சாமி மற்றும் வத்திராயிருப்பு, குன்னூரைச் சேர்ந்த திரு.கார்த்திக் ஈஸ்வரன் (வயது 35) த/பெ. ஜோதி நாயுடு ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திரு. போஸ் (வயது 35) த/பெ.சபரியப்பன் மற்றும் திரு.மணிகண்டன் (வயது 31) த/பெ.பிள்ளையார் ஆகிய இருவருக்கும் சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி யிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# டி.என்.பி.எஸ்.சி. தலைவராக ஐ.ஏ.எஸ். அதிகாரி எஸ்.கே.பிரபாகர் நியமனம்!

சென்னை, ஆக.15-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயத்தின் (டிஎன்பிஎஸ்சி) தலைவராக, வருவாய் நிர்வாக ஆணையராக உள்ள ஐஏஎஸ் அதிகாரி எஸ்.கே.பிரபாகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக அரசின் பல்வேறு நிலைகளில் உள்ள அரசுப்பணிகளில் காலியாகும் பணியிடங்களுக்கு தகுதியானவர்களை தேர்வு செய்யும் முகமையாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயம் செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் காலியாகும் இடங்களுக்கு ஏற்ப, தேர்வுப் பட்டியலை முன்னரே வெளியிட்டு, அதன்படி டிஎன்பிஎஸ்சி தேர்வுகளை நடத்தி வருகிறது. டிஎன்பிஎஸ்சியை பொறுத்தவரை, ஒரு தலைவர் மற்றும் 14 உறுப்பினர்கள் அரசின் பரிந்துரைப் படி, ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர். தற்போதைய சூழலில் 9 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர்.

முன்னதாக, தலைவராக இருந்த ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி பாலச்சந்திரன் கடந்த 2022ம் ஆண்டு பணி மூப்பால் ஓய்வு பெற்றார். இதையடுத்து, 2022ம் ஆண்டு ஜூன் 10ம் தேதி முதல், டிஎன்பிஎஸ்சி உறுப்பினர்களில் ஒருவரான ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி சி.முனியநாதன் பொறுப்பு தலைவராக உள்ளார்.

இந்நிலையில், டிஎன்பிஎஸ்சி தலைவராக தற்போது, வருவாய் நிர்வாக ஆணையராக உள்ள எஸ்.கே.பிரபாகரை நியமித்து தமிழக அரசு இன்று (ஆக.13) உத்தரவிட்டுள்ளது. இவர் பதவியேற்கும் நாளில் இருந்து 6 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை இப்பதவியில் இருப்பார் என்று தமிழக மனித வள மேலாண்மைத்துறை வெளியிட்ட உத்தரவில் கூறப்பட் டுள்ளது. கடந்த 1966ம் ஆண்டு விருதுநகர் மாவட்டத்தில் பிறந்த எஸ்.கே.பிரபாகர், ஐஐடி டெல்லியில் எம்டெக் முடித்தவர். கடந்த 1989ம் ஆண்டு நேரடி ஐஏஎஸ் அதிகாரியாக தேர்வாகி, தமிழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி வந்துள்ளார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வ ராக இருந்தபோது அவரது செயலாளர்களில் ஒருவராக பணியாற்றிய வர் எஸ்.கே.பிர பாகர். தமிழக அரசில் தகவல் தொழில்நுட்பத் துறை, வணிகவரித் துறை, பொதுப் பணித் துறை உள்ளிட்ட துறைகளின் செயலராக பணியாற்றியுள்ளார்.

கடந்த 2019ம் ஆண்டு இவர் கூடுதல் தலைமைச் செயலர் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட் டார். கடந்த 2021ல் திமுக ஆட்சி பொறுப்பேற்ற நிலை யில், முதல்வர் மு.க. ஸ்டாலின், இவரை உள் துறைச் செயலராக நியமித்தார். அதன்பின், வருவாய் நிர்வாக ஆணையராக நியமிக்கப்பட்டார். ஓய்வு பெற இன்னும் 17 மாதங்கள் உள்ள நிலையில், தற்போது எஸ்.கே.பிரபாகர் டிஎன்பிஎஸ்சி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கம்மராசபுரம் கே.எம்.இராஜகோபால்

### ஆகஸ்ட் 15 (1980)



**தனது 16வது வயதிலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து, தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்று கழகத்தில் தீவிரமாக பணியாற்றி தமிழகமெங்கும் சுற்றி மூடநம்பிக்கை எதிர்ப்பு பிரச்சாரம் செய்தவர்.**

**அண்ணாவின் 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தில் இராவணன் வேடமேற்று நடித்தவர்.**

**உழவர் குத்தகை உரிமை – இந்தி எதிர்ப்பு – சட்ட எரிப்பு – விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் களம் புகுந்து சிறை சென்றவர்.**

**1965ல் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் – 1976ல் மிசா சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.**

**உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் – கம்மராசபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக மறையும் வரை தொடர்ந்து பொறுப்பில் இருந்தவர்.**

**காஞ்சிபுரம் வட்டக் கிளைச் செயலாளர் – செங்கல்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் – தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**